1974 ஏப்ரல் 11,

(5) அறிவிப்புகள்

அரசினர் உறுதி மொழிக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214 (1) வது விதியின் கீழ் பின்வரும் பேரவை உறுப்பினர்களை 1974-75-ம் ஆண்டுக்கான அரசினர் உறுதி மொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :

1. திரு. சி. வி. எம். அண்ணாமலை
2. திரு. எம். ஏ. அபுசாலி
3. திரு. செ. அரங்கநாயகம்
4. திருமதி. த. ந. அனந்தநாயகி
5. திரு. நா. கிருட்டிணன்
6. திரு. தே. கேசவலு
7. திரு. கே. டி. கே. தங்கமணி
8. திரு. எஸ். நல்லசாமி
9. திரு. எம். முத்தையா
10. திரு. ஆ. முனியாண்டி
11. திரு. வ. க. ராமராசன்
12. திரு. ஜே. ஜேம்ஸ்

பேரவை 215 வது விதியின்கீழ், திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/74)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு மீதான விவாதம் தொடங்கும்.

இதைச் சேர்த்து 9 சட்டமுன்வடிவுகள் இரண்டு தீர்மானங்கள் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு சட்டமுன்வடிவிற்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கிக் கொண்டு பேசினால் நல்லது என்று நினைக்கிறேன். அப்படி முறையில்லை என்றாலும் 9 பில்லும் 2 தீர்மானங்களும் இருப்பதால் ஒரு சட்ட முன்வடிவை ஒரு நாள் முழுவதும் விவாதித்துக்கொண்டு போவது என்பது முறையாக இருக்காது என்பதால் நேரத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு பேசுவது நல்லது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஒரு முக்கியமான தீர்மானம் வருகிறது. ஆகவே, பில்ஸ் மாத்திரம் இன்று வைத்துக் கொள்ளுங்கள். ரிலிஜியஸ் எண்டௌமென்ட் பில்லை எடுத்துக்கொண்டால் நாலைந்து திருத்தங்கள் வருகின்றன. அதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச வேண்டியிருக்கும். வேண்டுமென்றால் மாலையும் வைத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்குச் செல்லுகிற மசோதாக்களை மறுபடியும் விவாதிக்கின்ற வாய்ப்பு இருக்கும் காரணத்தால் அவற்றை விவாதம் இல்லாமலே முடித்து விடலாம். மற்ற மசோதாக்கள் சிறிய மசோதாக்கள். அந்த மசோதக்களை ஒட்டிய கருத்துக்களை மட்டும் பேசினால் சீக்கிரம் முடிந்துவிடும். வேறு கருத்துக்களுக்கும் போவதால் காலதாமதம் ஆகிறது. எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மசோதா எந்த இலாகாவைப் பற்றியதாக இருக்கிறதோ அதைப் பற்றிய, அதிலிருக்கக்கூடிய குற்றங் குறைகளை மசோதா வாயிலாகச் சொல்லுவதற்கு வழி இருக்கவேண்டும். Otherwise it is not at all correct.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது முறையல்ல. விவாதத்திற்கு வருகிற திருத்தத்தைப் பற்றித்தான் பேச வேண்டுமே தவிர பொதுவாக மசோதா பற்றிப் பேசுவது முறையல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: ரிலிஜியஸ் என்டௌமென்ட் பில்லில் கணக்குக் காட்டுவது பற்றி வருகிறது. கணக்குக் காட்டாமல் எவ்வளவோ கோயில்கள் இருக்கின்றன. அதைப் பற்றியெல்லாம் பேசாமல் இருக்க முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது விவாதமாகப் பேசுவது முறையல்ல. என்ன திருத்தம் வருகிறதோ அதைப் பற்றி மட்டுந்தான் பேச வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அறநிலைய மசோதா விவாதத்திலே காட்டு இலாகாவைப் பற்றியோ, ரெவின்யூ இலாகாவைப் பற்றியோ பேசினால் முறையல்ல. அறநிலையத் துறை பற்றிய கருத்துக்களை எப்படிப் பேசாமல் இருக்க முடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற விதிமுறைகளின் கீழ் ஏற்கனவே பல பேரவைத் தலைவர்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். எந்தத் திருத்தம் வந்திருக்கிறதோ அதைப்பற்றித்தான் பேச வேண்டும். பொதுவாகப் பேசுவது முறையல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மசோதாக்கள் சம்பந்தமாக ஏற்கனவே பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. நமது தமிழ்நாட்டில் ஒரே நாளில் அரை டஜன் மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன. மசோதாக்களின் பேரில் அதிகமான அக்கறையை உறுப்பினர்கள் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதைக் காட்டவில்லை என்று செய்தி வந்திருக்கிறது. ஆகவே அவசர அவசரமாக இவற்றை எல்லாம் முடிக்க முடியாது. நேற்று விடப்பட்ட மசோதாக்கள் இருக்கின்றன. நேற்றே கொடுக்கப்பட்ட முக்கியமான ஒரு தீர்மானம் இருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் மீது விவாதம் வரும் போது எந்த அளவுக்கு அது நீடிக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். அதற்குப் பின்னாலே மசோதாக்கள் இருக்கின்றன. இன்றைக்கே முடித்துவிட வேண்டுமென்ற நிலையை வைத்துக் கொண்டு நேரத்தை நிர்ணயிக்க முடியாது. மசோதாவுக்கு உட்பட்ட விஷயங்களைப் பேச வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே, இன்றைக்கு எல்லாம் முடிந்துவிடும் என்ற நிலையை எடுக்கக்கூடாது. 15, 16, 17 தேதிகளில் கூட்டம் வைத்திருக்கிறோம். தேவையானால் கூட ஒரு நாள் வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இன்றைக்கு இந்த அவையின் முன் விவாதத்திற்கு இருக்கும் மசோதாக்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் இன்றைக்கு முடிகிற மாதிரி இல்லை. இன்றைக்கு இவற்றை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு முடிக்கிற அளவுக்கு முடித்துக் கொண்டு 15, 16, 17 தேதிகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பது மாற்றி 15-ம் தேதி இவற்றைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டு 16, 17, 18 என்று வைத்துக்கொள்ளலாம்.